**செய்தி வெளியீடு எண்: 744** **நாள்: 12.12.2012**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டில் தற்போது மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் முறையே 7.50 மெகாவாட் மின்சாரமும், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டு, அரசின் பொது தொகுப்பிற்கு வழங்கப்படுகிறது.

இதேபோன்று, தற்பொழுது தமிழகத்திலுள்ள 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவியுடன் மொத்தம் 183 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான திட்டச் செலவு மின் நிதி கழகம் (Power Finance Corporation), இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (Indian Renewable Energy Development Agency) மற்றும் சர்க்கரை அபிவிருத்தி நிதி (Sugar Development Fund) மூலம் பெறப்படும் நிதியுதவி மற்றும் கடனுதவி மூலமும், விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பங்குத் தொகை மூலமும், இந்த திட்டத்தினை செயல்படுத்த உத்ததேசிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து கடன் கிடைப்பதில் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு, இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்படுவதற்கு ஏதுவாக, தமிழக அரசு குறுகிய கால கடனாக 352 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், தங்கள் ஆலைகளில் அமைக்கப்படும் இணை மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தங்களது ஆலையின் பொருளாதார நிலைமையினை சீர் செய்து கொள்ளவும் மற்றும் ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தவும் இயலும்.

பருவமழை பொய்க்கும் காலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நீர்மின் நிலையங்களின் உற்பத்தி பெருமளவு குறைந்து விடும். இந்த பாதிப்பினை சரி செய்வதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் பருவமழை நன்றாக பொழியும் காலங்களில் நீர்மின்சக்தி இழப்பீட்டுத் தொகையாக ஆண்டொன்றுக்கு 125 கோடி ரூபாய் கருவூலப் பத்திரங்களில் முதலீடு செய்து,, பின்னர் இந்தத் தொகை பருவழை பொய்க்கும் காலங்களில் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு அளிக்கப்படும் என உத்தரவிட்டிருந்தார்கள்.

அந்த வகையில், தற்பொழுது கருவூலப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 375 கோடி ரூபாய் ஆகும். இந்த ஆண்டு பருவமழை பொய்த்துள்ள காரணத்தால், இந்தத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, நீர்மின்சக்தி உற்பத்தி இழப்பீட்டு மானியத் தொகையாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 12.12.2012.